## கூட்டுறவு மிகை நிதியம் - 2018

---

### மறுப்பு அபிப்பிராயம்

---

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை வழங்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.1 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள்

### 1.4.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.4.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 1 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுகளுடன் தேறிய சொத்துக்கள் / மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய குறிப்புகள் நிதிக்கூற்றுகளுடன் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 1 இன் 132 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுகளை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி, பெறுமானத் தேய்வு வீதம், முதலீடு மற்றும் முதலீட்டு வட்டி போன்றவை தொடர்பில் மதிப்பீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய குறிப்பு இலக்கம் 5 இன் மூலம் விர்வான பதிவேடுகள் பட்டோலை இலக்கம் 1 இன் மூலம் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முன்வைக்கப்பட்டுள்ளது. முதலீடுகளுக்குரிய குறிப்பு இலக்கம் 2 இன் மூலம் விரிவான பட்டோலை இலக்கம் 2 மற்றும் 3 இன் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | நியம இலக்கம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் பொருண்மையான முன்னைய காலப்பகுதிகளின் வழுக்கள் அவை கண்டறியப்பட்டதன் பின்னர் அவை பொருண்மையானவை எனின் ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் காண்பிக்கப்படுவதால் பின்னோக்கி திருத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறல்லாது முன்னைய ஆண்டுகளின் சீராக்கமாக ரூபா 8,054,044 தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டில் பெற வேண்டியதாக காணப்பட்ட நிலையான வைப்பு வட்டிக் கணிப்பீட்டின் போது இடம்பெற்ற வழுக்கள் இந்த வருடத்தில் திருத்தப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களுக்காக விளைவுடைய ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 4,523,617 தொகையான நடைமுறையல்லா சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள போதிலும், நிதியத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு உள்ளது. அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்வரும் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட வழுவினை அகற்றி கணக்குகள் தயாரிக்கப்படுவதாக தெரிவிக்கின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.4.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீட்டு கொள்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கூட்டுறவு சுழற்சி கடன் மீதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிதியேற்பாடு ரூபா 13,749,075 ஆன போதிலும், அத்திகதியில் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு ரூபா 14,113,755 ஆனமையால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 364,680 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கூட்டுறவு சங்க கடன் மற்றும் வட்டி பட்டோலைகளை பதிவு செய்யம் போதும் கணக்கு வைக்கும் போதும் இடம்பெற்றுள்ள தாமதத்தின் காரணமாக இந்த தவறு இடம்பெற்றுள்ளது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய கூட்டுறவு சங்கக் கடன் வட்டி ரூபா 224,610 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கூட்டுறவு சங்க கடன் மற்றும் வட்டி பட்டோலைகளை பதிவு செய்யும் போது மற்றும் கணக்கு வைக்கும் போது இடம்பெற்றுள்ள தாமதத்தின் காரணமாக இந்த தவறு இடம்பெற்றுள்ளது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.4.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக்கூற்றுகளின் பிரகாரம் பெறுமதி | இணைந்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | கூட்டுறவு சங்க கடன் | 554,726,072 | 654,724,398 | 99,998,326 | கூட்டுறவு சங்கக் கடன் பேரேடு மற்றும் பட்டோலையில் காணப்படுகின்ற இந்த வேறுபாடு நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படும் வேறுபாடு ஆகும். | வேறுபாடு இனங்காணப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | பெற வேண்டிய கூட்டுறவு சங்க கடன் வட்டி | 187,329,883 | 124,525,128 | 62,804,755 | கூட்டுறவு சங்கக் கடன் பேரேடு மற்றும் பட்டோலையில் காணப்படுகின்ற இந்த வேறுபாடு நீண்ட காலமாக முன்கொண்டு வரப்படும் வேறுபாடு ஆகும். | வேறுபாடு இனங்காணப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.4.5 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை | தொங்கலாக இருந்த காலப்பகுதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தொங்கல் கணக்கு | 9,475,735 | 19 வருடங்கள் | 1999 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவர ப்படுவதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு முன்வைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தொங்கல் கணக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டு கணக்குகளுக்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.4.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பெற வேண்டிய கூட்டுறவு சங்க கடன் | 554,726,072 | மீதி சான்றுபடுத்தல்கள் | சங்கங்களின் மூலம் கடன் மீதிகளை உறுதிப்படுத்துமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சில சங்கங்கள் | மீதி சான்றுபடுத்தல்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | கூட்டுறவு நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய தொகை | 5,029,486 | மீதி சான்றுபடுத்தல்கள் | மூலம் பதில்கள் வழங்கப்பட்டிராமையால் மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது. எதிர்காலத்தில் மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொது வைப்புக் கணக்கு | 9,961,736 | விரிவான பட்டோலை |
| (ஈ) | நிலையான வைப்புப் பிணை உரித்தாளர்கள் | 58,918,112 | கடன் கோவைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (உ) | கலைத்தல் (வரவு மீதி) | 2,620,473 | தயாரிக்கப்பட்ட கலைத்தல் கணக்கின் பிரதியொன்று |
| (ஊ) | செலுத்த வேண்டிய திறைசேரி நிதியம் | 150,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் விரிவான பட்டோலைகள் |
| (எ) | செலுத்த வேண்டிய தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 3,871,256 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் விரிவான பட்டோலைகள் |

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய தொகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திற்கு 1992 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 155,919,038 தொகையான கடன் பணத்தில் ரூபா 128,993,618 தொகையான கடன் மீதி மற்றும் அதற்குரிய ரூபா 57,779,966 தொகையான நிலுவை வட்டி தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | இணங்குகின்றேன். வ/ப இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திற்குரிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்துமாறு தொடர்ச்சியாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதுடன், சங்கத்தினை அழைத்து உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 6 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அறவிடப்பட | இணங்குகின்றேன். உரிய சங்கங்களை வருவித்து கடன் மீள்பதிவு செய்யப்பட்டு சங்கங்களுக்கு செலுத்துவதற்கு | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய கடன் தவணைகள் மற்றும் வட்டி முறையே ரூபா 78,620,419 மற்றும் ரூபா 39,957,507 ஆகும். | காணப்படும் இயலுமையை அடிப்படையாக கொண்டு பகுதிவாரியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,721,566 தொகையான மதிப்பிழந்த காசோலைகளின் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1999 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற பெறுமதியாவதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களுக்கு முன்வைக்கப்பட்டு அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 1989 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 70 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் வருடத்தின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 90,910,718 தொகையான அறிவடப்பட வேண்டிய கடன் மீதிகளில் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருந்தது ரூபா 736,536 மாத்திரமாகும். | கடன் மீள்பதிவிற்காக நியமிக்கப்பட்டிருந்த குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் கடன் அறவிடப்பட வேண்டும் என அறிவிக்கின்றேன். | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தொகையின் ஏனைய பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மிகை நிதியம் செலுத்த வேண்டியரூபா 6,017,551 தொகையான 30 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி மற்றும் கூட்டுத்தொகை ரூபா 7,299,745 தொகையான மேலும் 05 பொறுப்பு கணக்குகளின் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்வதற்கு போதியளவான சான்றுகள் இனங்காணப்படாமையால் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இந்த கணக்குகளை திருத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 188 (2) | 2013 மற்றும் 2014 ஆகிய வருடங்களுக்குரிய ரூபா 106,093 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், தீர்ப்பனவு செய்யப்படாத காசோலைகள் 02 தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 169,817,707 தொகையான மிகையொன்றானதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 206,780,520 ஆகும். இதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 36,962,813 தொகையான வீழ்ச்சியொன்றினை காண்பித்தது. நிறுவன மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 5,573,023 இனால் குறைவடைந்திருந்த போதிலும், வட்டி வருமானம் ரூபா 41,552,368 இனால் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகை தொடர்பில் திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 610,551,550 தொகையான கடன் மீதியில் மீளாய்வாண்டினுள் | இணங்குகின்றேன். கடன் அறவிடல் மற்றும் பின்தொடர் பணிகளை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் பணம் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருந்தது ரூபா 10,558,119 மாத்திரமாக உள்ளதுடன், அது ஆரம்பத்தில் நிலவிய மீதியில் 1.72 சதவீதம் மாத்திரமாகும். | | |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டில் பதிவு இரத்துச் செய்யப்பட்டிருந்த மனிதவள கூட்டுறவு சங்கத்தினை கலைத்தலின் நானாவித செலவினங்கள் மற்றும் வைப்புக்களை விடுவிப்பதற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் நிதியத்தினால் செலவிடப்பட்ட ரூபா 56,901,825 தொகை பெற வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. சங்கத்தினை கலைக்கும் நடவடிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராமையால் பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | இணங்குகின்றேன். கலைத்தல் தீர்மானத்தின் பிரகாரம் பெரும்பாலான கோவைகள் மூடப்பட்டிருப்பதுடன், செயற்பாட்டிலுள்ள ஆவணங்களில் தவணைகளாக கடன் அறவிடப்பட்டவாறு உள்ளது. | சங்கத்தின் கலைத்தல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கட்டிட பொருள் கூட்டுத்தாபனத்திற்கு 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 75,000,000 கடன் தொகையில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவைக் கடன் மீதியான ரூபா 62,091,327 இன் கடன் வட்டியான ரூபா 35,762,355 தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கடன் அறவிடலின் காலம் கடந்திருந்த போதிலும், சொத்துக்களை தீர்ப்பனவு செய்து கடனை அறவிடுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட கடன் தொகையை அறவிவதற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடன் செலுத்தப்படாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். | உடன்படிக்கையின் பிரகாரம் கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் வங்கி நடைமுறைக் கணக்கின் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியில் ரூபா 3 மில்லியனுக்கு அதிகமான மீதியொன்று பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 48,449,063 ஆகும். அதற்கமைய மாதாந்த செலவின தேவைப்பாடு எதிர்வுகூறப்பட்டு மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்த செலவினத்தை எதிர்வுகூறி மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதியில் ரூபா 45 மில்லியன் 2019 சனவரி முதல் வாரத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |